# வெருகல் ஸ்ரீ சித்திரவேலாயுதர் காதல் பிரபந்தத்தில் புலப்பாட்டு மரபு

**திருமதி. செல்வஅம்பிகை நந்தகுமரன்,**
சிரேஷ்ட விரிவுரையாளர். தமிழ்த்துறை. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். selvampikai@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

ஈழத்துச் சமய மரபுகளில் முருகவழிபாடு குறிப்பிடத்தக்க இடத்தினைப் பெற்றிருக்கின்றது. கிழக்கிலங்கையின் திருப்படைக் கோயில்களில் ஒன்றாக வெருகல் ஸ்ரீ சித்திரவேலாயுதர் கோயில் விளங்குகின்றது. இக்கோயிலின் மீது வீரக்கோன் முதலியார் காதல் பிரபந்தமொன்றினைப் பாடியுள்ளார். சித்திரவேலாயுதர் காதலைச் சமய இலக்கியமாகவே பலர் நோக்குகின்றனர். இந்நூல் இலக்கியப் பண்புகள் பல வற்றைத் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. சித்திரவேலாயுதர் காதலை இலக்கிய நோக்காகக் கொண்டு அதன் புலப்பாட்டு மரபை ஆய்வு செய்வதே ஆய்வின் முக்கிய பிரச்சினையாகக் கொள்ளப்படுகின்றது. வீரக்கோன் முதலியாரின் வெருகல் ஸ்ரீ சித்திரவேலாயுதர் காதல் பிரபந்தம் ஆய்வின் முதன்மை மூலமாகக் கொள்ளப்படு கின்றது. இந்நூல் தொடர்பாக எழுந்த வசனநூல், கட்டுரைகள், ஆய்வுகள் துணைமை ஆதாரங்களாகக் கொள்ளப்படுகின்றன. இந்நூல் இலக்கியப் பண்புகளைக் கொண்டு விளங்குகின்றது என்ற கருதுகோளின் அடிப்படையில் ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது. வீரக்கோன் முதலியாரின் வெருகல் ஸ்ரீ சித்திரவேலாயுதர் காதல் பிரபந்தத்தில் இலக்கியப் புலப்பாட்டு மரபு எவ்வாறு வெளிப்பட்டு நிற்கின்றது என்பதை விவரண மற்றும் பகுப்பாய்வு முறையியல்களைத் துணைக்கொண்டு ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**திறவுச்சொற்கள்:-** வெருகல் சித்திரவேலாயுதர், வீரக்கோன் முதலியார், காதல் பிரபந்தம், புலப்பாட்டு மரபு, இலக்கியப் பண்புகள்.

## அறிமுகம்

*ஈழத்தில் நிலைபெற்று வழங்குகின்ற சமயமரபுகளில் சைவசமயமே மிகப் பழமையானது. பண்டைக்காலம் முதல் ஈழத்தில் சைவசமயம் மேன்மைபெற்று விளங்குகின்றது. நீண்டகாலமாக இந்தியாவுக்கும் ஈழத்துக்குமான தொடர்புகள் வலுப்பெற்றிருந்ததை வரலாறுகளால் அறிய முடிகின்றது. தமிழகத்தில் ஏற்பட்ட சமய, பண்பாட்டு வளர்ச்சிகளும் தாக்கங்களும் ஈழத்திலும் செல்வாக்கினை ஏற்படுத்தியிருந்தன. எனினும் ஈழத்தில் தனித்துவமான சமயமரபுகள் பின்பற்றப்பட்டதனை வரலாறுகள் சான்று பகர்கின்றன.*

ஈழத்துச் சமய வழிபாட்டில் குறிப்பிடத்தக்க இடத்தினை முருகவழிபாடு பெற்றிருந்தது. ஈழத்தின் முருகவழிபாட்டின் தனித்துவத்தையும், சிறப்பினையும் இலக்கியச் சான்றுகள் மற்றும் தொல்பொருட்சான்றுகள் மூலமாக அறிந்து கொள்ள முடிகின்றது. ஈழத்தில் சைவசமயம் சிறப்புற்று விளங்கிய இடங்களில் கிழக் கிலங்கை தனித்துவமான இடமாக விளங்குகின்றது. கிழக்கிலங்கைப் பிரதேசத்தின் சமய வளர்ச்சியில் முருகவழிபாடு பிரத்தியேகமான இடத்தைப் பெற்றிருக்கின்றது.

தமிழகத்தில் முருகன் கோயில்களை ஆறுபடை வீடுகள் எனச் சிறப்பிக் கின்றனர். இலங்கையின் கிழக்குப் பிராந்தியத்தில் அமைந்துள்ள முருகன் கோயில் களைத் திருப்படைக் கோயில்கள் என அழைக்கும் வழக்கம் உண்டு. (திருப்படைக் கோயில்கள் மீதான பிரபந்தங்கள், 2018, ix) மட்டக்களப்புத் தமிழ் வழக்கில் "திருப் படை" என்னும் சொல் கோயிற் திருவிழாக்களுடன் சம்பந்தப்பட்டது. திருப்படைக் கோயில்களின் சிறப்பினை வெளிக்கொணர்வதில் அக்கோயில்கள் மீது பாடப்பெற்ற பிரபந்தங்கள் முக்கிய சான்றுகளாக விளங்குகின்றன. இவற்றுள் வெருகல் ஸ்ரீ சித்திர வேலாயுதர் காதல் என்னும் பிரபந்தம் காலத்தால் முற்பட்டது. இந்நூல் தம்பல காமத்தைச் சோந்த வீரக்கோன் முதலியாரால் பதினேழாம் நூற்றாண்டில் பாடப் பட்டது. வெருகலைப்பற்றிப் பாடும் நூலாசிரியர் பிரதேச வழங்களையும், பிற கோயில் களையும், வழிபாட்டு முறைகரளயும் சிறப்பாகப் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்தவகையில் கிழக்கிலங்கையில் தோன்றிய முதலாவது பிரபந்தம் என்னும் சிறப்பினை இந்நூல் பெறுகின்றது.

காதல் இலக்கியப் பிரபந்தங்கள்

சிற்றிலக்கிய வகைமைகளுக்கான இலக்கணத்தைக் கூறும் பாட்டியல் நூல்களில் பெரும்பாலானவை காதல் இலக்கியத்திற்கு இலக்கணம் செய்யவில்லை. காதல் என்ற வகை தனியாகக் கூறப்படவில்லை எனினும் "பவனிக்காதல்" என்ற இலக்கிய வகைமை கூறப்படுகின்றது. பவனிக்காதல் என்பது உலாப்பிரபந்தத்திற்குப் புறத்துப் பிறந்த ஒன்றாகக் கருதப்படுகின்றது. பாட்டியல் நூல்களில் பெரும் பாலானவை உலா இலக்கியத்திற்குரிய இலக்கணங்களைக் கூறுவனவாக அமை கின்றன. வீரமாமுனிவரின் சதுரகராதியிலும் நவநீதப் பாட்டியலிலும் பவனிக்காதல் பிரபந்தவகை பற்றிக் கூறப்படுகின்றது. வீரமாமுனிவரின் சதுரகராதியில்,

"உலாக் காட்சியா லெய்திய காம மிகுதியாலவை
பிறரொடு முரைத்து வருந்துவது" (சதுரகராதி)

என்று கூறுகின்றார். நவநீதப் பாட்டியலுள் எஸ். வையாபுரிப்பிள்ளையின் பதிப்பிற் காணப்படும் மிகைச் செய்யுள் ஒன்றில்,

"செயன் மீறச் சீதை பிறர்க்குரைத்தாற்
பவனிக் காதல் தேமொழியே (நவநீதப்பாட்டியல், மிகைச்செய்றுள்: 10)

என்று கூறுகின்றது. இவ்விரு விளக்கங்களும் பவனிக்காதல் என்பது உலாப்புறத்துப் பிறந்த ஒன்றென்பதைக் காட்டிநிற்கும் எழுவகைப் பருவத்துப் பெண்களும் தலைவன் ஒருவனைக் கண்டு காதலிப்பதாக உலாப்பிரபந்தம் அமைய உலாவிடைக் கண்ட ஒரு வனைத் தலைவி ஒருத்தி காதலித்து வருவதாகப் பவனிக்காதல் பிரபந்தவகை அமைகின்றது.

பவனிக்காதல் பிரபந்தத்தின் வரைவிலக்கணத்திற்கமைந்த இலக்கியங்கள் தற்போது கிடைக்கவில்லை. எனினும் அதிலிருந்து வளர்ச்சி கண்ட காதல் இலக்கியங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. வீரமாமுனிவரின் ஆசிரியராகிய சுப்பிரதீபக்கவிராயர் பாடியுள்ள கூளப்பநாயக்கன் காதலில் தலைவன், தலைவியைச் சந்திப்பதும் புணர்ச்சி நிகழ்த்துவதும் அன்னை அறிந்து துன்பப்படுவதும் போன்ற கூறுகள் உள்ளடக்கப் பட்டுள்ளன. சித்திரவேலாயுதர் காதலில் கூளப்பநாயக்கன் காதலில் இடம்பெறும் கூறுகளுக்கு மேலாக குறத்தி வந்து நற்குறி சொல்லுதல், கிளி தூது சொல்லுதல் போன்ற கூறுகள் இடம்பெற்றுள்ளன. எனவே கூளப்பநாயக்கன் காதல் பவனிக்காதல் இலக்கணத்திலிருந்து பெற்ற வளர்ச்சியைவிட வெருகல் சித்திரவேலாயுதர் காதல் மேலும் ஒருபடி கூடுதலான வளர்ச்சி பெற்று விளங்குகின்றது. காதல் பிரபந்தத்தின் இலக்கணம், பாட்டியல் நூல்களில் சரிவர வரையறுக்கப்பெறாமையால் இவ்வகையில் தோன்றிய இலக்கியங்களைக் கொண்டே இலக்கணம் வகுக்கவேண்டியுள்ளது.

### வெருகல் சித்திரவேலாயுதர் காதல்

ஒல்லாந்தர்காலத்தில் தோற்றம்பெற்ற பிரபந்த இலக்கியவடிவங்களில் வெருகல் சித்திரவேலாயுதர் காதல் என்பது தனித்துவம் பெற்ற ஓர் இலக்கிய வடிவமாகக் காணப்படுகின்றது. தம்பலகாமத்தின் முதுபெரும் கவிஞராக விளங்கிய வீரக்கோன் முதலியாரால் பதினேழாம் நூற்றாண்டு இந்நூல் இயற்றப்பட்டது. இப்பரபந்தம் வெருகல் பதியில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சித்திரவேலாயுதர் சுவாமி மீது பாடப்பட்டதாகும். வெருகல் சித்திரவேலாயுதர் மீது வீரக்கோன் முதலியார் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்ததைப் பாடற்சான்றுகளின் வழி அறியமுடிகின்றது. சிற்றின்பம், பேரின்பம் கலந்த சிறந்ததொரு காவியமாக இந்நூல் விளங்குகின்றது. இந்நூல் 421 கண்ணிகளால் ஆக்கப்பட்டுள்ளது.

வெருகலைப் பற்றிப்பாடும் நூலாசிரியர் தேசத்தின் வளங்களையும், கோயில் களின் வழிபாட்டு மரபுகளையும், பல்வேறு ஊர்களையும் பாடியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். முருகபக்தி இலக்கியம் என்றதற்கு அப்பால் ஈழத்தில் வரலாற்றுச் சான்றுகள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. வெருகலம் பதியின் அமைப்பு, சிறப்புக்கள் இப்பிரபந்தத்தின் மூலம் வெளிக்கொணரப் பட்டுள்ளது. கிழக்கிலங்கைத் திருப்படைக்கோயில் மீது பாடப்பட்ட முதலாவது பிரபந்தம் என்னும் சிறப்பினை இந்நூல் பெற்றுக்கொள்கின்றது.

### சித்திரவேலாயுதர் காதலில் இனங்காணப்படும் புலப்பாட்டு மரபு

முருகபக்திப் பிரபந்தங்களின் வரிசையில் இடம்பெறும் வெருகல் சித்திர வேலாயுதர் காதலின் புலப்பாட்டு மரபு அதன் இலக்கியவளத்தைச் சான்றுசெய்வது நோக்கத்தக்கது. இதனை மேல்வரும் அடிப்படையில் பகுத்து ஆராயலாம்.

- அகத்திணை இலக்கிய மரபை உள்வாங்கியிருத்தல்.
- புராணச் செய்திகளின் பதிவுகள்.

- பழந்தமிழ் இலக்கி மரபை உள்வாங்கியிருத்தல்.
- அணிப்பிரயோகங்கள்.
- நெகிழ்ச்சியான மொழிநடை.

**அகத்திணை இலக்கிய மரபை உள்வாங்கியிருத்தல்**

சங்க இலக்கியங்கள் அகத்திணைப் பொருள்மரபைச் சிறப்பாக வெளிப்படுத்தி யுள்ளன. சங்ககாலத்து மானுடக்காதலாக இருந்த அகத்திணைமரபு, பக்தி இலக்கியங் களில் தெய்வீகக் காதலாக மாற்றம் பெறுகின்றது. பக்தி என்பது இறைவனிடத்தில் அடியவர் காட்டும் அன்பைக் குறிக்கின்றது. இறைவனிடம் பேரன்புபூண்டவர் அவனை இடையறாது நினைத்துக்கொடிருத்தலும் அவனைத் தன் உயிராகக் கருதுதலும் அக்காரணங்களால் இறைவனுக்கு மிகவும் விருப்பமாகத் தன்னை ஆக்கிக்கொண்டு இறையருளைப் பெறுதலும் பக்தியின் நோக்கமாகும். அன்பினால் இறைவனை அடையத்துடிக்கும் ஆன்மா தன்னைப் பெண்ணாகப் பாவனை செய்து அன்பு செலுத்துகின்றது. இதனையே நாயக நாயகி பாவனை என்று பக்தி இலக்கிய காரர் கூறுவர். சம்பந்தர், நாவுக்கரசர், ஆண்டாள், நம்மாழ்வார், மாணிக்கவாசகர், திருமங்கையாழ்வார் போன்றோர் நாயக நாயகி பாவனையில் பக்திப் பனுவல்களைப் புனைந்துள்ளனர். இவர்கள் தமது பக்தி அனுபவங்களையே காதல் அனுபவங்காளாகப் பாடியுள்ளனர். நாயக நாயகி பாவனை என்பது பக்தி நெறியாளர்களின் பக்தி அனுபவமாக மட்டுமன்றி, அது பக்தி இலக்கியத்தின் முதன்மையான பாவனை உத்தியாகவும் விளங்கியது.

பக்தி இலக்கியகாரர் கையாண்ட நாயக நாயகி பாவனை உத்தியை வெருகல் சித்திரவேலாயுதர் காதலிலும் நூலாசிரியர் கையாண்டுள்ளார். இங்கு முத்துமோகனம் பெண் ஆன்மாவாகவும் வேலாயுதப்பெருமான் பரமாத்மாவாகவும் சித்திரிக்கப் பட்டுள்ளனர். ஆசிரியர் இந்நூலில் ஜீவப்பிரம்ம ஐக்கியத்தை சித்தாந்தக் கோட் பாட்டின்படி நிறுவியுள்ளார். முத்துமோகனப் பெண் சித்திரவேலாயுதர் மேல் கொண்ட விரகதாபத்தை,

"நல்லணங்கே விட்டகலே னென்று சொல்லிப்
பொல்லாக் காமப் புகைக்கூட்டிலேற்றி விட்டான்

சீலத்தவன் போல வந்து நின்று செய்த விந்த்ர
சாலத்தை யெல்லாஞ் சரியென்றிருந்து விட்டேன்

தேசார் வலக்கரத்தைச் சென்னிமிசையாக வைத்து
ஆசாரங்கள்ளானிட்ட ஆணைதனை நம்பிவிட்டேன்." (சி. வே. கா: 293 295)

என்னும் பாடல்வரிகள் இதற்குச் சான்றுபகர்கின்றன. தமிழிலக்கிய மரபிலே பெயர் சுட்டாப் பாக்களே அகத்திணைக்குரியன. சித்திரவேலாயுதர் காதலில் தலைவன், தலைவி பெயர்கள் சுட்டப்பட்டுள்ளன. மானிடக்காதலைப் பாடாது தெய்வீகக் காதலைப் பாட விழைந்தமையே இதற்குக் காரணமாகும். தலைவிக்குத் தலைவன்மேல் உண்டாகும் காதலில் ஏற்படும் உடல், உள மாற்றத்தை அணங்குகளால் ஏற்பட்டதாகக்

கருதி அதனை நீக்கமுயலுதல், குறத்தி குறிசொல்லுதல், கிளியைத் தூதுவிடுதல் போன்ற அகப்பொருள் துறைகளையும் நூலாசிரியர் பிரபந்தத்தில் புகுத்தியுள்ளமை சிறப்பானதாகும்.

புராணச் செய்திகளின் பதிவு

வெருகல் சித்திரவேலாயுதர் காதலில் புராணச் செய்திகள் பலவற்றை வீரக்கோன் முதலியார் பல்வேறு இடங்களில் பதிவு செய்துள்ளார். சிவபெருமான், வீரபத்தின், ஐயனார், உமை, காமன், வள்ளி, தெய்வயானை, வைரவர் போன்ற தெய்வத் தொன்மங்கள் பால்களில் பல்வேறு இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

முருகன் சூரனை அழித்தமை, இராவணன் கையிலை மலையைப் பெயர்க்க முயன்றமை, பிரம்மனுக்குத் தலையில் குட்டியமை போன்ற புராணச்செய்திகளைப் பதிவுசெய்ததன் மூலம் இந்நூலைக் கற்போருக்குச் சமய அறிவை வழங்கியுள்ளார்.

"சூரனை முன் செற்ற சுடர்வடிவேற் கையுடைய
வீரனடி யேற்கருளும் வேலவன் மேற் காதல் சொல்ல"

(சி. வே. கா: 15)

"தென்னிலங்கை ராவணனைச் செய்ய விரலூன்றிப்
பின்னவன்ற னின்னிசையைப் பெட்புடனே கேட்டுவந்து"

(சி. வே. கா: 3)

"துங்கமிகு தாரகனைச் சொல்லு கிரவுஞ்சமதைச்
சிங்கனொடு சூரனை முன் செய்ய மலர்க்கையிதுவோ"

(சி. வே. கா: 190)

"மட்டவிழும் தாமரை மேல் வாழுமயன்றன் சிரத்திற்
குட்டிப் பொருளுரைத்த மோகனக் கையிது"

(சி. வே. கா: 191)

"கண்ணாயிரமுடைய காரிதுயரைத் தவிர்த்து
விண்ணொடு வாழவைத்த மென்கமலக் கையிதுவோ"

(சி. வே. கா: 192)

மஞ்சிலகு மிந்திரன் மகளாயுதித்த தெய்வ
குஞ்சரிக்கு மாலையிட கோலமலர்க் கையிதுவோ"

(சி. வே. கா: 193)

"மேருவைச் செண்டாலடித்த மென்மலர்க் கையிதுவோ
சீருடனே வாரி வேல் செல்லவிட்ட கையிதுவோ"

(சி. வே. கா: 194)

போன்ற அடிகள் சித்திரவேலாயுதர் காதலில் காணப்படும் புராணச் செய்திகளுக்குச் சில எடுத்துக்காட்டுகளாகும். இலக்கியங்களில் தொன்மச் செய்திகளைக் கையாளுதல் என்பது ஒருவகை உத்திநிலையாகும். நாயன்மார்களினதும் ஆழ்வார்களினதும் பக்திப் பாடல்களில் தொன்மச் செய்திகளைக் கையாளும் பண்பு இருந்துள்ளது. பக்தி உணர்வை எடுத்துச்சொல்லும் முயற்சிகளில் புராணக்கதைகள் மிகவும் பயன்பாடும் மூலவளங்களாக அமைந்தன. பக்திநெறியாளர்களின் வழியில் வீரக்கோன் முதலியாரும் தொன்மச் செய்திகளைத் தமது பிரபந்தத்தில் பயன்படுத்தியுள்ளார். இத்தொன்மச்

செய்திகள் மக்கள் மத்தியில் முருகனது பெருமைகளை எடுத்துப்பேசத் துணை நிற்கின்றன. இவ்வாறான கதைகளுக்கு ஊடாகப் புலப்படும் முருகனது திருக்கோலக் காட்சிகள் கற்பனைச் சுவைபட வர்ணிக்கப்பட்டன.

பழந்தமிழ் இலக்கிய மரபை உள்வாங்கியிருத்தல்

வீரக்கோன் முதலியார் பழந்தமிழ் இலக்கிய மரபில் நின்று வெருகல் சித்திரவேலாயுதர் காதல் பிரபந்தத்தைப் பாடியிருக்கின்றார். இதனைப் பல அம்சங்களால் அறியலாம். திருமுருகாற்றுப்படையில்,

"காடும் காவும் கவின்பெறு துருத்தியும்
யாறும் குளனும் வேறுபல் வைப்பும்
சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும்
மன்றமும் பொதியினும் கந்துடை நிலையினும்" (திருமுருகாற்றுப்படை 223 226)

என இயற்கையுடன் கூடிய வழிபாட்டுச் சூழலை நக்கீரர் புலப்படுத்துகின்றார். வீரக்கோன் முதலியாரும் இதனையொத்த தன்மையில் பல இடங்களில் இயற்கையுடன் கூடிய வழிபாட்டுச் சூழலை வர்ணிக்கின்றார்.

"கூரிய கைவாளாற் குவலயத்திலொன்னலரைச்
சீருடனே தானரிந்து செங்குதியாற்றினிடை

செல்ல விடுப்பதுபொற் சீயமொடு தந்தி மந்தி
கொல்லும் புலிமுதலாக் கூறும் விலங்கினத்தை

தன்னி யுருட்டிக் கொணர்ந்து சாகரத்திற் செல்லவிடும்
விள்ளரு மவலி கங்கை மேவும் வெருகற் பதியான்

கன்னலொடு பூகநட கதலியெழின் மாவருக்கை
துன்னிவளர் சோலை துலங்கும் வெருகற்பதியான்." (சி. வே. கா: 32 35)

என்று இயற்கையுடன் கூடிய வெருகற்பதியின் வழிபாட்டுச் சூழலைக் கண்டு கொள்ளலாம்.

ஒட்டக்கூத்தர் பாடியஇரண்டாம் குலோத்துங்கசோழன் உலாவில் எழுவகைப் பருவப் பெண்களும் குலோத்துங்கனுடைய அழகிலும் வீரத்திலும் புகழிலும் மயங்கி அவனைக் கண்டு காதல் செய்யும் வகை கூறப்படுகின்றது. அதேபோன்று வெருகல் சித்திரவேலாயுதர் காதலிலும் சித்திரவேலாயுதரின் அழகும் அன்பும் அவருடைய அருட்செயலும் பேசப்படுவது குலோத்துங்கன் சோழன் உலாவை நினைவுபடுத்து கின்றது.

"கையிலெடுத்த கலையை யுடுக்காமல்
மெய்மறதி கொண்டு வெளிவீதி வந்தார் பெண்கள்

வட்டமுலைப் பாலருந்தும் வண்ணக் குழந்தைகளைச்
சட்டெனவே தூக்கித் தலைகீழாத் தொங்கிடவே

சிற்றிடையில் வைத்துத் தெருவீதி தன்னில் வந்து
பற்றுடனே வேலர் பவனி விழாப் பார்ப்பார் சிலர்

தண்டனை செய் மாமிதனக் கொளித்து ஓடிவந்து
திண்டிறல் சேர்வேலர் சிறப்பையுற்றுப் பார்ப்பார் சிலர்

தன்கணவனென்று தெருத்தன்னில் வரும் வேறொருவன்
பின் கரத்தைப்பற்றி நின்று வேடிக்கை பார்ப்பார் சிலர்." (சி. வே. கா: 129 133)

முத்துமோகனப் பெண்ணுக்கு குறத்தி குறி சொல்லும் காட்சி குற்றாலக் குறவஞ்சியிலே வசந்தவல்லிக்கு குறத்தி குறி சொல்லும் காட்சியை ஒத்ததாக அமைகின்றது.

"வயிரமுடன் மாணிக்கம் விளையுமலை அம்மே
வானரவி முழைகள் தொறும் நுழையுமலை அம்மே
துயிலுமவர் விழிப்பாக அகிலமெங்கும் தேடும்
துங்கர் திரி கூடமலை எங்கள் மலை அம்மே" (குற்றாலக்குறவஞ்சி: 16)

"மாமனார் பொதியமலை மன்னுங் கதிரைமலை
சேனாடர் போற்றுகின்ற செய்ய திருகோணமலை

பொன்னா ருகந்தமலை போற்று மிமயமலை
மின்னாரு மேருமலை வெள்ளிமலை முதலாய

எத்தனையோ கோடிமலையெங்கள் மலையாகு மம்மே
அத்தனைக்கும் பேருரைக்கவார்க்கு மரிதாகு மம்மே

சித்திரவேலாயுதர் தந் தேவி வள்ளி நாயகிக்கு
மெத்தமலை சீதனமாய் விரும்பிக் கொடுத்தோமம்மா" (சி. வே. கா: 336 339)

இவ்வாறாக குறவர் குலத்தின் சிறப்பு மலைவளம், குறத்தி குறி சொல்லும் காட்சி போன்றன சித்திரவேலாயுதர் காதலில் குற்றாலக் குறவஞ்சியை ஒத்ததாகக் காணப்படு கின்றது. முத்துமோகனப் பெண்ணின் அழகு வர்ணனை, கிளியைத் தூது அனுப்புதல், முத்துமோகனப் பெண்ணின் பிரிவுத்துயரம் போன்றவை பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படும் அம்சங்களாக அமைகின்றன. இவ்வாறு பழந்தமிழ் இலக்கிய மபை உள்வாங்கி வீரக்கோன் முதலியார் பாடியிருத்தலைக் காணமுடி கின்றது. இது மரபு தழுவிய புலப்பாட்டு நெறியை எடுத்துக்காட்டுகின்றது.

**அணிப்பிரயோகங்கள்**

வீரக்கோன் முதலியாரின் புனைதிறன்களில் ஒன்று அணிப்பயன்பாடுகள் ஆகும். தாம் புலப்படுத்த நினைக்கும் கருத்துக்கள் சிதையாத வண்ணம் பொருத்தமான அணிகளைப் பாடல்களில் கையாண்டுள்ளார். கடுமையான அணி அலங்காரங்களைப் பயன்படுத்தாமல் கற்போருக்கு விளங்கத்தக்க வகையில் உவமை, உருவக அணிகளை

யும் எதுகை மோனைச் சொற்களையும் தமது பாடல்களில் பயன்படுத்தியுள்ளார். அணி அலங்காரங்களின் பயன்பாடு என்பதை இவரது பாடல்களில் அரிதாகவே கண்டு கொள்ள முடிகின்றது.

"மையனைய பூங்குழலாள் மாதுபிடி யன்ன நடை
ஐயை மலர்ப் பாதமதை யன்பாகப் போற்றி செய்வாம்

மின்கரவு மாறுமுக மேவுசித்ர வேற்பெருமான்
நன்குடைய பொற்றாளை நாளுமறவேனே

கோளரியை நேர் பானுகோபன முன்னாண் மடித்த
வாள் கரத்திற் சேர் வீரவாகுபத மேத்திடுவோம்" (சி. வே. கா: 6 8)

என எளிமையான உவமைகளைக் கையாண்டுள்ளமை நூலாசிரியரின் புலப்பாட்டு நெறியின் தனிச்சிறப்பைக் காட்டுவதாகும். பக்தியைப் பாடுபொருளாகக் கொண்டிருந்தபோது காட்சிகளை அழகிய முறையில் வர்ணிக்கும் நூலாகவும் இது திகழ்கின்றது. வெருகற்பதியின் சிறப்பு, நகர அலங்காரம், சித்திரவேலாயுதர் உலா வருகையில் அவரைக் கண்ணுற்ற மாதர்களின் நிலை, முத்துமோகனப் பெண்ணின் அழகு போன்றவற்றைக் காட்சிப்படுத்தும் திறன் குறிப்பிடத்தக்கவொன்றாகும். சித்திரவோயுதர் உலா வருகிறார் என்ற செய்தியைக் கேட்ட மக்கள் வீதிகளை அலங்கரித்துக் கொண்டனர். இதனை,

"கம்ப நடுவார் ககனமுகடுரிஞ்ச
அம்பொற் கொடிகளழகாகத் தூக்கிடுவார்

மாணிக்கத் தூணிறுத்தி வைரவனை யேற்றி
ஆணிப்பொற்கட்டா லரங்காரமாய் வேய்ந்து

வன்னமிகு பந்தரிட்டு வாசமிகக் கமழும்
புன்னைதென்னை வாழையொடு பூகம் நிறுத்திடுவார்

மல்லிகையுங் சன்பமம் வாசமுள்ள தாமரையுஞ்
சொல்லரிய கோங்குந் தொடையலாத் தூக்கிடுவார்." (சி வே. கா. 61 64)

எனவரும் அடிகள் காட்டுகின்றன. வீரக்கோன் முதலியாரின் அணிப்பயன்பாடு கற்பனை வளத்தையும் சிறப்பான பொருட்புலப்பாட்டையும் இயல்பான காடசி வர்ணிப்பின் திறத்தையும் காட்டுகின்றது.

நெகிழ்ச்சியான மொழிநடை

இலக்கிய ஆக்கத்துக்குரிய கருவிகளில் மொழியும் ஒன்றாகும். இலக்கிய ஆசிரியரின் கருத்தையும் உணர்ச்சியையும் வெளிப்படுத்துவதாக மொழிநடை அமை கின்றது. எளிமையும், இனிமையும், இறுக்கமும் உடைய மொழிநடை படிப்பவரை இறுதிவரை சலிப்பூட்டாமல் இலக்கியத்தோடு ஒன்றச் செய்யும். அந்தவகையில் வீரக்கோன் முதலியாரின் மொழிநடை சிறப்பானதாகக் காணப்படுகின்றது.

*சித்திரவேலாயுதர் காதலில் இடம்பெறும் மொழிநடை மிகவும் எளிமையான தாக, படிப்போர் விளங்கத்தக்கவகையில் ஆற்றொழுக்கினைப் போல நகர்ந்து செல் கின்றது. சமயக்கருத்தினை அகத்திணை மரபை உத்தியாகக் கொண்டு புலப்படுத்த முயன்றதால், பொருத்தமான சொற்களையும் சொற்றொடர்களையும் காட்சி வர்ணனைகளையும் வேண்டிய இடத்தில் பொருத்தமுறக் கையாண்டுள்ளார். எதுகைச் சொற்களை இணைத்து இரண்டடிக் கண்ணிகளால் பாடமுயன்றமை இவரது மற்றுமொரு சிறப்பாக அமைகின்றது.*

நிறைவாக

*வீரக்கோன் முதலியாரின் வெருகல் ஸ்ரீ சித்திரவோயுதர் காதல் தமிழ் இலக்கிய உலகில் சிறப்புப்பெற்ற ஒன்றாக விளங்குகின்றது. கிழக்கிலங்கையில் தோன்றிய முதலாவது பிரபந்தம் என்னும் சிறப்பினை வெளிக்கொணரும் வகையில் அமைகின்றது. இந்நூல் பக்தி இலக்கிய வரிசையில் இடம்பெற்றிருந்தமையால் அதனுடைய இலக்கியத்தரம் புலனாகாதவகையில் அமைந்திருக்கலாம். இலக்கியப் புலப்பாட்டு நெறிநின்று ஆய்வுசெய்யும் பொழுது அதன் இலக்கியச் சிறப்பினையும் தரத்தினையும் கண்டுகொள்ள முடிகின்றது. வீரக்கோன் முதலியாரிடம் காணப்பட்ட தமிழ்ப்புலமையும் முருகபக்தியும், தமிழ்ச்சுவையின் வழி பக்திச்சுவையைப் புலப்படுத்தும் திறனைத் தோற்றுவித்திருக்கலாம். முருக பக்தி இலக்கியம் என்பதற்கு அப்பால் தமிழ் இலக்கியம் என்ற தளத்தில் வீரக்கோன் முதலியாரின் சித்திரவேலாயுதர் காதல் பிரபந்தத்தை வைத்துப் பார்ப்பது பொருத்தமானதாகும்.*

பயன்படுத்திய நூல்கள்

அனுசியா, ஸ்ரீ., (2009). வெருகல் சித்திரவேலாயுதர் காதல் - ஓர் ஆய்வு. கலைமாணிப்பட்ட ஆய்வேடு. தமிழ்த்துறை. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

கணேசலிங்கநாதன், நா., (2005). வெருகல் சித்திரவேலாயுதர் காதல் வசனம். திருகோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை வேல்நடை பஜனைக்குழு.

தயாளினி, கு., (2019). வெருகல் சித்திரவேலாயதர் ஆலயப் பண்பாட்டு மரபுகள். முருகபக்தி ஆய்வுமாநாடு. இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம்.

திருக்குற்றாலக்குறவஞ்சி. (2000). புலியூர்க்கேசிகன் தெளிவுரை. பாரிநிலையம். சென்னை.

நடராசா. F. X. C. (1962). ஈழத்துத் தமிழ்நூல் வராறு. அரசு வெளியீடு. கொழும்பு.

நவநீதப்பாட்டியல். (1943). எஸ். வையாபுரிப்பிள்ளை பதிப்பு. மயிலை தமிழ்ச்சங்கம்.

வீரக்கோன் முதலியார். (2000). வெருகல் சித்திரவேலாயுதர் காதல். இலங்கை திருப்படைக் கோயில்ள் மீதான பிரபந்தங்கள். இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம்.

8. வீரமாமுனிவர். (2015). சதுரகராதி. சந்தியா பதிப்பகம்.